பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 01 சனிக்கிழமை 17.08.2024 கதிர் 283

## 'மைத்திரி சஜித்துடன் இணைவு' வெளியான செய்தி பச்சை பொய்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்துள்ளதாக வெளியான செய்தி பொய்யானதுஎனஐக்கிய மக்கள்சக்தியின் ஊடகப் பேச்சாளர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில்அவர்விடுத்துள்ள அறிவிப்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் ஜனாதிபதியுடன் கூட்டு சேர்வதற்கோ அல்லது அவ்வாறானஆதரவைப் பெறுவதற்கோ ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு அவசியம்ஏற்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமானதோல்வியை எதிர்நோக்கி, வெறிபிடித்துள்ள ஆளும்தரப்புக்கு சார்பான பரப்புரைக் குழுக்கள் பொய்யான செய்திகளை உருவாக்கி ஊடகங்கள்மற்றும்சமூக ஊடகங்கள்ஊடாகபரப்பி வருகின்றனர்.

இந்த தேர்தல் காலத்தில் அனைத்து கட்சிகளுக்கும் சவாலாக மாறி ☞8

## ஜனாதிபதி ரணிலை ஆதரித்து 34 அமைப்புகள் ஒப்பந்தம்

### 'இயலும் ஸ்ரீலங்கா' என அதற்குப் பெயருமிட்டனர்

வரும் ஜனாதிபதித் தேர்தலில்ஜனாதிபதிரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்து கட்சிகள் மற்றும் கூட்டணிகள்என34அமைப்புக்கள்நேற்றுபுரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. 'இயலும்ஸ்ரீலங்கா' என்ற இணக்கப்பாட்டின் கீழ் இந்த உடன்படிக்கை கொழும்பு வோர்டஸ் எஜ் கையெழுத்திடப்பட்டது.

மக்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவே 'இயலும் சிறீஷ்லங்கா' இணக்கப்பாட்டில் 34 அரசியல் கட்சிகள், கூட்டணிகளுடன் இணைந்து கையெழுத்திட்டன எனவும் நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நிகழ்வில் மகா சங்கத்தினரும் செத்பிரித் பாராயணம் செய்து ஆசிர்வாதம் வழங்கியதுடன், ஏனைய சர்வமத குருமார்களும் சமய வழிபாடுகளை மேற்கொண்டு ஆசி வழங்கினர்.

நிகழ்வில் தொடர்ந்து பேசியஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்ததாவது:

'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கை அரசியல் கட்சியொன்றைஉருவாக்கு வதற்காக மாத்திரமன்றி அனைவரையும் ஒன்றிணைத்து மக்கள் மற்றும் நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்பவே இந்த உடன்பாடுஎட்டப்பட்டுள்ளது. 'முடியாது' என்று ☞8

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித்தேர்தல்வேட்புமனுத் தாக்கலுக்குப் பிறகாவது வடக்கு கிழக்கில் அரசியல் களம் சூடாகும் என்று பார்த்தால் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. தெற்கில் நேற்று பரப்புரைக் கூட்டங்கள் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன. சஜித் பிரேமதாஸவின் முதல் கூட்டம் குருநாகலில் நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையிலானமக்கள்அந்தக் கூட்டத்திற்குத் திரண்டிருந்தனர். இதுவரை நடந்ததிலேயே மிகப் பெரிய தேர்தல் கூட்டம் இதுதானா இல்லையாஎன்றுதெற்கு ஊடகங்கள் விவாதித்துக்கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதிரணில்தரப்புக்கூட்டங்களும் இன்று தொடங்கவுள்ளது. உதிரி உதிரியாக பல கட்சிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணிலுக்கு ஆதரவாக இருந்தாலும் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இவர்களைக் கொண்டு சஜித்தின் அல்லது தேசிய மக்கள் சக்தியின் கூட்டங்களைப் போன்ற தேர்தல் கூட்டங்களைநடத்தமுடியுமாஎன்பது சந்தேகம்தான்.

நாமல்ராஜபக்சவுக்குவேட்புமனுத் தாக்கல்செய்துவிட்டுவெளியே வந்ததுமே ஆதரவாளர்கள் ☞2

# இனப்படுகொலைத் தூபிக்கு கனடாவில் அடிக்கல் நடுகை

## இலங்கையின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் நகர்வு



இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையின் நினைவாக கடனாவின் பிரம்டன் நகரில் நினைவுத் தூபி ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது. இலங்கையின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் இந்த நினைவுத்தூபிக்கானபணிகள் ☞2

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியும் தாவினார்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செயிட் அலிஸாஹிர் மௌலானா தனது கட்சியின் முடிவுக்கு மாறாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முடிவு செய்துள்ளார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவை அவரது அரசியல் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை சந்தித்து அவர் தனது ஆதரவை வெளிப்படுத்தினார். ☞8

## தமிழர்களை பலியிடத் துடிக்கும் சக்திகளை புறந்தள்ளவேண்டும்

### சுரேஸ் பிரேமச்சந்திரன் அறிக்கை



எம்மை பலியிடத் துடிக்கும் சக்திகளைப் புறந்தள்ளி அவர்களின் விருப்பம்நிறைவேறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று எச்சரித்திருக்கிறார் ஈபிஆர்எல்எவ் கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அண்மையில் சுமந்திரன் வெளியிட்டுள்ள கருத்துகளுக்கான பதில் எனத் தெரிவித்து அவர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2024ஆம்ஆண்டிற்கான ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதன் முக்கிய வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸ்ஸநாயக்க போன்றோர் அடிக்கடி வடக்குகிழக்குக்கு வருவதும் அங்குள்ள பல்வேறு கட்சிகளையும்தனிநபர்களையும் சந்தித்துப் பேசுவதும் இப்பொழுது கிரமமாக நடைபெற்று வருகின்றது.

இதற்குமேலதிகமாக தமிழர் தரப்புகளை கொழும்புக்கு வருமாறு அழைத்து அவர்களைச் சந்திக்க விரும்புவது ஒருபுறமும் திரு. சுமந்திரன்,சாணக்கியன் போன்றோர்இவர்களைத் தேடித்திரிந்து ☞2

## தமிழ் அரசுக் கட்சி தன் முடிவை சரியான நேரத்தில் அறிவிக்கும்

### சுமந்திரன் கிளிநொச்சியில் தெரிவிப்பு

சரியான நேரத்தில் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்போம்எனநாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர்தொடர்பான தனது நிலைப்பாட்டை தமிழ் அரசுக் கட்சி இதுவரையில் எடுக்காதது கவலை அளிக்கிறது, விரைவில் அது ஒரு முடிவை எடுக்க வேண்டும்என்றுதமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்றஉறுப்பினர் விக்னேஸ்வரன்தெரிவித்திருந்தார். தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனின் வேட்புமனுத் தாக்கல் நிறைவுபெற்ற பின்னர் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் முடிவு எப்போது வெளியிடப்படும், மற்றைய கட்சிகள் தங்கள் ஆதரவு நிலைப்பாட்டை ☞8

## காங்கேசன்துறையில் 'சிவகங்கை' பயணிகள் கப்பல் சேவை ஆரம்பம்



இந்தியாவின்நாகப்பட்டினத்துக்கும் இலங்கை காங்கேசன்துறைக்கும் இடையிலானபயணிகள் கப்பல் சேவை நேற்று கோலாகலமாகத்தொடங்கியது.நாகையில்இருந்து புறப்பட்ட 'சிவகங்கை' கப்பல்41பயணிகளுடன் காங்கேசன்துறையை நேற்று மாலை வந்தடைந்தது.

நாகைதுறைமுகத்தில் இருந்த இலங்கை காங்கேசன்துறைக்கு நேற்றுப்பகல்பயணிகள் கப்பல் போக்குவரத்தை, புதுச்சேரி மாநில உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், நாகை மக்களவை உறுப்பினர் செல்வராஜ்,மாவட்ட ☞2

## மதுச்சாலை உரிமைக் கலாசாரம் இல்லை அரசியல் சூதாட்டம் முற்றாக நிறுத்தப்படும்

### எதிர்க் கட்சித் தலைவர் வாக்குறுதி

மதுபானசாலைகளுக்கான 'பார்' உரிமம் வழங்கும்கலாசாரங்கள் எம்மிடம் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் மதுபானம் இல்லாதயுகமொன்றை உருவாக்க முயற்சிப்போம். அரசியல் சூதாட்டம் முற்றாக நிறுத்தப்படும் என்று தெரிவித்தார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

நாடுதற்போதுஇயல்பு நிலையில் இருப்பதாக ஜனாதிபதி அவர்கள் கூறினாலும், நாட்டில் உருவாகியிருப்பது புதியதொரு இயல்பு நிலையாகும். இதனால் நாட்டு மக்கள் தொழில்களை இழந்து, ஜீவனோபாயத்தினை இழந்தறுமைநிலைக்கு தள்ளப்பட்டுள்ளதன் காரணமாக மக்கள் பெரும்கவலையில் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பெரும் ஆரவார வரவேற்பளித்து அட்டகாசம் செய்திருந்தனர். அதனால், அவரது பரப்புரைக் கூட்டங்களுக்கும் கணிசமான ஆட்கள் திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் பொது வேட்பாளர் பக்கத்திலிருந்து இந்தமாதிரி ஆரவார மான பொதுக் கூட்டங்களுக்கான அறிகுறிகள் எவையும் இல்லை. சமூக ஊடகங்களை நம்பித்தான் அவர்கள் பரப்புரையைத் தொடங்கியிருக்கிறார்கள் என்று தெரிகின்றது. அதுவும் கிழக்கில் அவர்களின் கதையையே காணவில்லை. பொதுவேட்பாளர் கதையை இவர்கள் தொடக்கியதிலிருந்து வடக்கில் குறைந்தது இரண்டு சிறிய நேரடிக் கூட்டங்களையாவது இவர்கள் நடத்தியிருக்கிறார்கள். ஆனால், கிழக்கில் ஒரேயொரு கூட்டம்கூட நடக்கவில்லை. கிழக்கில் அடியெடுத்து வைக்கவே அஞ்சுகிறார்கள் போலுள்ளது.

"கிட்டவரட்டும்திட்டம்இருக்கிறது" என்று காத்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. சமூக ஊடகங்களை மட்டும் நம்பி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பை, தேசியக் கட்டுமானத்தை இவர்கள் எப்படி முன்னெடுக்கப்போகிறார்கள், தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக எப்படி ஒட்டுமொத்தத் தமிழ் மக்களையும் திரட்டப் போகிறார்கள் என்பதையும் பார்ப்பதற்கு நான் ஆர்வமாக இருக்கின்றேன். இந்தவழியில் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டால், வீட்டில் இருந்தபடியே தேர்தலில் வெல்வது எப்படி என்பதற்கான முன்னுதாரணமாக அது அமையும். அதனால்தான் நான் ஆர்வமாக இருக்கின்றேன்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இனப்படுகொலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கப்பட்டுள்ளன.

பிரம்டன் நகர பிதா, கனடாவின் சுதேசிய உறவுகள் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

''இலங்கையின் கடந்தகால மீறல்கள் ஒருபோதும் மறக்கப்பட முடியாதவை என்பதற்கும், தமிழர்களின் மீண்டெழும் தன்மைக்குமான நிலையான சின்னமாக பிரம்டனில் நிர்மாணிக்கப்படவுள்ள தமிழினப்படுகொலை நினைவுத்தூபி திகழும்" என அமைச்சர் ஹரி ஆனந்த சங்கரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அடிக்கல் நடும் நிகழ்வையொட்டி, பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் அவரது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார்.

அப்பதிவில், தமிழ் இனப்படுகொலையினால் பாதிக்கப்பட்ட 100,000க்கும் மேற்பட்டோரை நினைவுகூரும் நோக்கில் இந்நினைவுத்தூபி நிர்மாண நடவடிக்கையை முன்னெடுத்திருப்பதற்காக கனேடியத் தமிழர்களின் தேசிய பேரவை, பிரம்டன் தமிழர் அமைப்பு மற்றும் பிரம்டன் தமிழ் சிரேஷ்ட பிரஜைகள் அமைப்பு ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

"இலங்கை அரசாங்கத்தினால் சிறுவர்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் வன்புனரப்பட்டனர். கிராமங்கள் பாரிய மனிதப்புதைகுழிகளாக மாற்றப்பட்டன. இனப்படுகொலை அரசாங்கத்தினால் காவு வாங்கப்பட்ட இந்த அப்பாவி உயிர்களை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம்" எனவும் அவர் அப்பதிவில் தெரிவித்திருக்கிறார்.

"தமிழர்களின் கனடாவுக்கான பயணம் என்பது எமது தேசிய கதையின் ஓரங்கமாகும். இலங்கை அரசாங்கத்தினால் கட்டவிழ்த் துவிடப்பட்ட வன்முறைகளின் விளைவாக நாட்டைவிட்டு வெளியேறிய தமிழர்களுக்கு ப்ரையன் மல்ரொனி தலைமையிலான ஆட்சி கனடாவின் கதவுகளைத் திறந்துவிட்டது.

அதேபோன்று ஸ்டீபன் ஹார்பர் தலைமையிலான ஆட்சி இலங்கை தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டதுடன் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாயக் கூட்டத்தொடரைப் புறக்கணித்தது. ஒன்டாரியோவின் ஃபோர்ட் ஆட்சி தமிழ் இனப்படுகொலையை பாடசாலை மாணவர்களின் பாடவிதானத்தில் உள்ளடக்கியது. ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான ஆட்சி தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளை அங்கீகரித்து ஏற்றதுடன், இலங்கையின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக பயணமற்றும் சொத்துத்தடைகளை விதித்தது" எனவும் மேயர் பற்றிக் பிரவுன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மேலும் நீதியையும், நல்லிணக்கத்தையும் அடைந்துகொள்வதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியிருப்பினும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதைப் புறந்தள்ளும் மிகமோசமான இலங்கை ஆளும் தரப்புக்கு எதிரான தொடர் போராட்டத்தில் கனடா எப்போதும் முன்நிற்கும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

அதேவேளை இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள கனடாவின் சுதேசிய உறவுகள் அமைச்சர் ஹரி ஆனந்த சங்கரி, "எமது கூட்டிணைவு மற்றும் உறுதிப்பாடு என்பவற்றுக்கான வலுவான அடையாளமாகத் திகழக்கூடியவகையில் பிரம்டனில் தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபியை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு மே மாதம் 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாக அங்கீகரித்த முதலாவது தேசிய நாடாளுமன்றம் என்ற வரலாற்று முக்கியத்துவத்தையும் கனடா உரித்தாக்கியிருக்கின்றது" என மேலும் தெரிவித்தார்.

(இந்த நினைவுத் தூபிக்காக கனேடிய தூ-துவரை அயலுறவுத் துறை அமைச்சர் அலி சப்ரி அழைத்துத் தனது கண்டனத்தைத் தெரிவித்த செய்தி உள்ளே)

## காங்கேசன்துறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியர் ப. ஆகாஷ் ஆகியோர் கொடியசைத்து, தொடங்கி வைத்தனர்.

இந்தியா - இலங்கை இடையே நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி 'செரியாபாணி'' என்ற பெயரில் பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது. வடகிழக்கு பருவமழை காரணமாக அதே மாதம் 23 ஆம் திகதி கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு மீண்டும் ''சிவகங்கை" என்ற பெயரில் கப்பல் இயக்க முடிவு செய்யப்பட்டு, அதற்காக அந்தமானில் இருந்து "சிவகங்கை" கப்பல் நாகை துறைமுகத்திற்கு கடந்த வாரம் வந்தது.

சோதனை ஓட்டம் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நிறைவேறியதைத் தொடர்ந்து நேற்றுமுதல் சேவை முழு அளவில் இயங்கத் தொடங்கியது.

இந்தச் சேவையை நாகை மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், மக்களவை உறுப்பினர் வை. செல்வராஜ், புதுச்சேரி மாநில உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், நிர்வாக இயக்குநர் சுந்தர் ராஜன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். இன்று நண்பகல் 12.15 மணியளவில் ராகு காலம் முடிந்து சுபநேரத்தில்- கப்பல் புறப்பட்டது.

இலங்கைத் தமிழர்கள் 5 நபர்கள் உட்பட, 41 பயணிகள் முதல் பயணமாகக் கப்பலில் புறப்பட்டனர். சிவகங்கை கப்பலானது, நேற்றுக் காலை 10 மணிக்கு புறப்படுவதாக இருந்தது. சிறிது காலதாமதம் ஏற்பட்டதால், பிற்பகல் 12.15 மணிக்குப் பிறகு புறப்பட்டது. காங்கேசன்துறைக்கு மாலை 4.15 மணியளவில் அது காங்கேசன்துறையை வந்தடைந்தது.

வந்தடைந்த படகையும் பயணிகளையும் யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதர் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

இன்று காலை கப்பல் காங்கேசன்துறையில் இருந்து புறப்பட்டு மதியம் 2 மணிக்கு நாகை துறைமுகத்தைச் சென்றடையும். பின்னர், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நாகை துறைமுகத்தில் இருந்து புறப்படும் கப்பல் காங்கேசன்துறைக்கு மதியம் 12 மணிக்கும், மறுமார்க்கமாக அதேநாள், மதியம் 2 மணிக்கு காங்கேசன் துறையில் இருந்து புறப்பட்டு மாலை 6 மணிக்கு நாகை துறை முகத்திற்கு கப்பல் வந்தடையும். அந்த நேரப்படி தொடர்ந்து தினசரி சேவை நடைபெறும்.

இந்தச் சிவகங்கை கப்பலில் 123 சாதாரண இருக்கைகள், 27 பிரீமியம் இருக்கைகள் என மொத்தம் 150 இருக்கைகள் உள்ளன. ஒருவழி பயணச் சீட்டு ஜிஎஸ்டி வரியுடன் சாதாரண இருக்கைக்கு இந்தியப் பணத்தில் ரூ. 5000, பிரீமியம் இருக்கைக்கு ரூ. 7500 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 25 கிலோ எடை கொண்ட உடமைகள் மட்டுமே எடுத்து செல்ல பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர். அதுமட்டுமின்றி கப்பலில் சாம்பார் சாதம், தயிர் சாதம், நூடுல்ஸ் உள்ளிட்ட துரித உணவுகளை கட்டணத்துடன் பெற்றுக்கொள்ள உணவக வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மதுச்சாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றனர்.

மக்களின் நுகர்வு, முதலீடு, சேமிப்பு மற்றும் உற்பத்தி ஆகியவை இல்லாமால் போயுள்ள காரணத்தினால் நாட்டின் ஏற்றுமதி பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. இக்காரணத்தால் நாட்டின் புதியதொரு இயல்புநிலை உருவாகியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்களின் வாழ்வாதாரத்தை குறைத்து , பணத்தினை சட்டைப் பைகளில் அடைத்து, செலவழிக்க முடியாதொரு நிலை உருவாகியுள்ளது. நாட்டை நாசமாக்கி, அதளபாதாளத்திற்கு கொண்டுசென்றுள்ள ஒருசாதாரண நிலையே நாட்டில் நிலவி வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அவர்கள் தெரிவித்தார்.

கண்டி, மல்வத்த மற்றும் அஸ்கிரி பீட மகா நாயக்க தேரரை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டதன்பிற்பாடு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டு மக்களின் தோள்களில் சுமக்க முடியாத அளவிற்கு சுமை ஏற்றப்பட்டு, இயல்புநிலை உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் பல்வேறுபட்ட முட்டாள்தனமான, நாட்டு மக்களை ஏமாற்றும் கருத்துகளைமுன்வைப்பவர்களுக்கு, நாம் பதிலளிக்க மாட்டோம் என்றும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் பார் உரிமம் வழங்குதல், ஏலம் மற்றும் மானியம் வழங்குதல் போன்ற கலாச்சாரங்கள் எம்மிடம் இல்லை. வாரிசு முறையில் அன்றி , 220 இலட்சம் மக்களின் வாக்குகளால் தான் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் மதுபானம் இல்லாத யுகமொன்றை உருவாக்க முயற்சிப்போம். அரசியல் சூதாட்டம் முற்றாக நிறுத்தப்படும்.

பொருளாதார மறுசீரமைப்பு என்று மக்கள் மீது எல்லையற்ற சுமைகளை சுமத்தி சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை தளர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

மக்களைத் துன்பத்திலிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம், துன்பப்படும் நாட்டு மக்களை அதிலிருந்து விடுவித்து, நாட்டை அபிவிருத்தி செய்யும் அனைவருக்கும் சுபிட்சம் தரும் உயர்ந்த கலாசாரமும், நாகரீகமான சட்டஒழுங்கும் கொண்ட ஒரு நாட்டை உருவாக்குவோம்.

சர்வ மதத் தலைவர்களும் கூறும் சிறந்த அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு, நாகரீகமான நாட்டைக் கட்டியெழுப்புவேன். பல ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து, 220 இலட்சம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கியிருக்கின்றேன். இனி ஜனாதிபதியாகி அதனைச் செய்யவேண்டும் - என்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

## தமிழர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பது இன்னொருபுறமுமாக அரசியல் நகர்த்தலில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக திரு. சுமந்திரன் அவர்கள் அண்மைக்காலங்களில் மீண்டும் மீண்டும் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களைச் சந்திப்பதும் அவற்றைப் பெரிய செய்தியாக பத்திரிகைகளுக்குக் கொடுப்பதும் பத்திரிகைகளும் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப்போகிறார் என்ற சாரப்பட கருத்துகளை எழுதுவதும் இப்பொழுது நடைபெற்றுவருகின்றது.

2024ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழர் தரப்பில் ஒருபொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்குள் பல சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றன. அதன் பிரகாரம் ஒரு தமிழ் பொது வேட்பாளருக்கான தேவை இருக்கின்றது என்பதை எமது கூட்டணி ஏற்றுக்கொண்டது. அதே சமயம் தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள சிவில் அமைப்புகளும் இ;வாறான ஒரு தேவை இருப்பதை தமது கலந்துரையாடல்கள் மூலம் உறுதிப்படுத்தின. அதன் பின்னர் இருதரப்பினரும் இணைந்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதுடன் பொதுவேட்பாளரைநிறுத்துவதுஎன்ற இலக்கை நோக்கி முன்னேறினர்.

இந்தக் காரணங்களினால் அச்சமடைந்துள்ள தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை எப்படியாவது பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கில் பலமுனைகளிலும் காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி திரு. சுமந்திரன் தனிநபராக தனது கட்சியினரின் ஒப்புதலோ அல்லது தமிழ் மக்களின் ஒப்புதலோ இல்லாமல் தான் ஜனாதிபதியுடன் பேசுகிறேன் என்று கூறுவதும் பதின்மூன்றை அவர் முழுமையாகத் தந்துவிடப்போகிறார் என்று சாரப்பட கருத்துகளை வெளியிடுவதும் தேர்தலில் மக்களை பிழையான பாதைக்கு இட்டுச் செல்வதற்கான ஒரு முயற்சியாகும்.

தமிழ் மக்களது உரிமைகளைப்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



# விடுதலைப் புலிகள் மீதான தடையைத் தொடரும் கனடாவின் நிலைப்பாட்டுக்கு இலங்கை வரவேற்பு

கனேடிய அரசாங்கத்தால் அண்மையில் புதுப்பிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் அடங்கிய பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீளவும் உள்ளடக்கப்பட்டிருப்பது குறித்து இலங்கை அரசாங்கம் வரவேற்பு வெளியிட்டுள்ளது.

கனேடிய அரசாங்கம் கடந்த 2006 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் உள்ளடக்கியது. அப்பட்டியல் 5 வருடங்களுக்குஒருமுறைமீளாய்வுக்குஉட்படுத்தப்படும். அதற்கமைய இவ்வருடம் ஜுன் மாதம் 7 ஆம் திகதி அப்பட்டியல் மீளப்புதுப்பிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு புதுப்பிக்கப்பட்ட பட்டியலிலும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. இதற்குவரவேற்புதெரிவித்துவெளிவிவகார அமைச்சால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் கனடாவைத் தளமாகக்கொண்டு இயங்கிய உலகத்தமிழ் அமைப்புடன் இணைந்ததாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில் தொடர்ந்து உள்ளடக்குவதற்கு கனேடிய அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானத்தை வரவேற்கிறோம். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கனேடிய அரசாங்கத்தால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புதுப்பித்தல் மீளாய்வின் பிரகாரம், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் எச்சங்கள் சர்வதேச ரீதியில் நிதி திரட்டலிலும், இயங்குகையிலும் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

உலகத்தமிழ் அமைப்பு தொடர்பில் கனேடிய அரசால் அளிக்கப்பட்டிருக்கும் விளக்கத்தில், அவ்வமைப்பானது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பில் நிதி திரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் ஊடாக புலிகள் இயக்கத்தின் பயங்கரவாத செயற்பாடுகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது.

எனவே, இவ்வமைப்புக்களால் தொடர்ந்து அச்சுறுத்தல் நிலவுவதன் காரணமாகவே அவற்றைத் தடை பட்டியலில் பேணுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது எனவும் வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(05)

## மூதூர் கங்குவேலி ஆதி சிவன் ஆலயத்திற்கு குடிதண்ணீர் வசதி




(எச்எம். ஹலால்தீன்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கங்கு வேலி ஆதி சிவன் ஆலயத்தின் பக்தர்களின் நலன் கருதி குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

இக் குடிநீர் வசதியை அமரர் சண்முகநாதனின் மனைவி பிள்ளைகளின் உதவியில் அமைக்கப்பட்டு எம் கடமை நிறுவனத்தின் பணிப்பாளர் ஜீவேந்திரனால் திறந்துவைக்கப்பட்டது.

இக்கு குடிநீர் வசதியை ஏற்படுத்தி





ஆதிசிவன் ஆலயத்துக்குவருகின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் நலன் கருதி குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

கொடுத்ததன்மூலமாகசிவபக்தர்களும் கோயில் நிர்வாகத்தினரும் தமது உணர்வு பூர்வமான நன்றியை தெரிவித்துள்ளனர்.(05)

## அட்டப்பள்ளம் விநாயகர் ஆலய அலங்கார உற்சவம்





( வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட நிந்தவூர் அட்டப்பள்ளம்ஸ்ரீசித்திவிநாயகர்ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இன்று(சனிக்கிழமை)எம்பெருமான் வீதி உலா வரவிருக்கிறார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை சமுத்திரதீர்த்தோற்சவமும்அன்னதானமும் இடம் பெறவிருக்கிறது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.(05)

### தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி

## கனேடியத் தூதுவரை அழைத்து அமைச்சர் அலிசப்ரி அதிருப்தி



கனடாவின்பிரம்டனில் தமிழர் இனப்படுகொலை நினைவுத் தூபியை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டமைக்கு இலங்கை கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கான கனடா தூதுவரை அழைத்து தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.


கனடாவின் வாக்குவங்கி அரசியலுக்காக தொடர்ந்து பரப்பப்படும் இந்த பொய்யான கதையை இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பிராம்டன் நகரசபையின் தவறான ஆலோசனையின் அடிப்படையிலான செயற்பாடு இலங்கையில் உள்ள அமைதியை விரும்பும் அனைத்து மக்களையும் புண்படுத்துகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற குற்றச்சாட்டானது,தீங்கிழைக்கும் தவறான தகவல்களை அடிப்படையாக கொண்ட புனையப்பட்ட மற்றும் தேசிய சர்வதேச அளவில் எந்தவொரு பொறுப்பான அதிகாரியாலும்நிரூபிக்கப்படாதகுற்றச்சாட்டு என அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்தஇரண்டு வருடங்களாக பொருளதார நெருக்கடி நிலவிய போதிலும், மோதல் முடிவிற்கு வந்த பின்னர் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும்,நிலையானசமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றது என தெரிவித்துள்ள அலிசப்ரி கனடா அரசாங்கம்தலையிட்டு குறிப்பிட்ட நினைவுத்தூபியை கட்டுவதை தடுத்துநிறுத்தவேண்டும் என வேண்டுகோள்விடுத்துள்ளார்.(05)

## திருக்கோவிலில் கோலாகலமாக நடைபெற்ற மாவட்டத் தமிழ் மொழித் தினப் போட்டிகள்







( வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டிக்கான கல்முனைக்கல்வி மாவட்ட போட்டி வியாழக்கிழமை திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகு மார் தலைமையில் அதன் அங்குரார்ப்பண விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், சிவ.ஜெயராஜன் கலாநிதி கரி கோல்சன் மற்றும் ஆர்.லாசன்,

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துள்ளா ஆகியோர் கலந்து கொண்டார்கள், முன்னதாக தமிழ் மொழி தின பண்பாட்டு ஊர்வலம் பலரும் மெச்சத்தக்க வகையில் கோலாகலமாக இடம்பெற்றது . அதன் பிறகு ஏனைய நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெற்றது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இனப்படுகொலைக்கான நிரந்தர அடையாளம்

இலங்கையின்கடும்எதிர்ப்பையும்மீறி,வாக்குறுதியளித்தபடி கனடாவின் பிரம்டன் நகரத்தில் தமிழ் இனப் படுகொலை நினைவானதூபியைஅமைக்கும்பணிகள்தொடங்கியுள்ளன. இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்தது என்பதை ஆணித்தரமாக நிறுவி, வரலாற்றில் இருந்து அழியவிடாத தன்மையை வழங்கும் இந்த முயற்சிக்காக கனேடிய மக்களுக்கும் அரசுக்கும் பிரம்டன் ஆளும் கட்சிக்கும் தமிழர்கள் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

இந்த நினைவுச் சிலையையொட்டி பிரம்டன் நகரபிதா விடுத்துள்ள செய்தியும் கவனத்திற்குரியது.

''இலங்கை அரசாங்கத்தினால் சிறுவர்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் வன்புனரப்பட்டனர். கிராமங்கள் பாரிய மனிதப்புதைகுழிகளாக மாற்றப்பட்டன. இனப்படுகொலை அரசாங்கத்தினால் காவு வாங்கப்பட்ட இந்த அப்பாவி உயிர்களை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம்.

தமிழர்களின் கனடாவுக்கான பயணம் என்பது எமது தேசிய கதையின் ஓரங்கமாகும். இலங்கை அரசாங்கத்தினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளின் விளைவாக நாட்டைவிட்டு வெளியேறிய தமிழர்களுக்கு ப்ரையன் மல்ரொனி தலைமையிலான ஆட்சி கனடாவின் கதவுகளைத் திறந்துவிட்டது.

அதேபோன்று ஸ்டீபன் ஹார்பர் தலைமையிலான ஆட்சி இலங்கை தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டதுடன் இலங்கையில் நடைபெற்றபொதுநலவாயக்கூட்டத்தொடரைப்புறக்கணித்தது. ஒன்டாரியோவின் ஃபோர்ட் ஆட்சி தமிழ் இனப்படுகொலையை பாடசாலைமாணவர்களின்பாடவிதானத்தில்உள்ளடக்கியது. ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான ஆட்சி தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளை அங்கீகரித்து ஏற்றதுடன், இலங்கையின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக பயண மற்றும் சொத்துத்தடைகளை விதித்தது.

இலங்கையில் நீதியையும், நல்லிணக்கத்தையும் அடைந்துகொள்வதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டிஇருப்பினும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதைப் புறந்தள்ளும் மிகமோசமான இலங்கை ஆளும்தரப்புக்கு எதிரானதொடர்போராட்டத்தில்கனடாஎப்போதும்முன்நிற்கும்'' என்று தெரிவித்திருக்கிறார் பிரம்டன் நகர பிதா.

அவர் உண்மையைச் சொல்லியிருக்கிறார். இலங்கைப் பிரச்சினையைத் தமது புவிசார் நலன்களுக்குள்ளால் மட்டும் கையாண்டு, தமிழர் பிரச்சினையை தமது தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்ளும் மேற்குநாடுகள் பலவற்றுக்கு மத்தியில் கனடா தொடர்ந்தும் தமிழருக்கு ஆதரவான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வருவது ஆறுதலான விடயம். அதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையையும் கனடா நீடித்திருக்கின்றது. தீவிரவாதத்திற்கு ஆதரவு இல்லை என்றபோது தமிழர்களின் நியாயமான துன்பத்திலும் துயரத்திலும் தனது அக்கறையைக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறது.

நினைவுத் தூபி நிகழ்வில் கருத்து வெளியிட்டுள்ள கனடாவின் சுதேசிய உறவுகள் அமைச்சர் ஹரி ஆனந்த சங்கரி, ''எமது கூட்டிணைவு மற்றும் உறுதிப்பாடு என்பவற்றுக்கான வலுவான அடையாளமாகத் திகழக்கூடியவகையில் பிரம்டனில் தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபியை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு மே மாதம் 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலைநினைவேந்தல்நாளாகஅங்கீகரித்த முதலாவது தேசிய நாடாளுமன்றம் என்ற வரலாற்று முக்கியத்துவத்தையும் கனடா உரித்தாக்கியிருக்கின்றது'' என்று தெரிவித்திருக்கிறார். இந்தத் தூபியை அமைக்கும் விடயத்தில் அவரது பங்கு பணியும் முக்கியமானது. வரவேற்கப்படவேண்டியது.


தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதியைப் பெற்றுத் தருவதில் கனடா காட்டும் ஆர்வத்திற்கு தமிழர்கள் தலைவணங்குவதுடன் அந்த முயற்சி நேர்மையானதாகவும் விட்டுக்கொடுக்கப்பட முடியாததாகவும் இருக்கவேண்டும் என்றும் விரும்புகின்றனர்.

# முதுமை; மாற்றத்திற்குத் தயாராவோம்

**என். பத்ரி**

முதுமை தவிர்க்க முடியாதது. ஐம்பது வயதைக் கடந்தாலே மனதிலும் உடலிலும் சோர்வு ஏற்படுவது இயல்பான ஒன்றே. இவற்றை முறையாக கையாளுவது மிகவும் அவசியம். நமது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு மண்டலம் நோயைக் கொண்டுவரும் வைரஸ்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுகிறது.

உடலின் மற்ற பகுதிகளைப் போலவே, மனிதர்களின் நோயெதிர்ப்பு மண்டலத்துக்கும் வயதாகிறது. இதனால் நாம் முதுமையில் எல்லா



வகையான நோய்களுக்கும் எளிதில் நண்பர்களாக மாறிவிடுகிறோம்.

முதுமையில் நோயெதிர்ப்பு மண்டலத்தின் செல்கள் சிறப்பாக செயல்படாததோடு, வீக்கத்தை ஏற்படுத்தும். இந்த வீக்கம் பல்வேறு நோய்களுக்கு வழிவகுக்கும். சில நோய் தொற்றுகள் நீண்ட காலத்துக்கு நம் உடலில் இருக்கலாம். பெண்களின் உடலில், மாதவிடாய் நின்ற பிறகு ஈஸ்ட்ரோஜன் பெண்களின் நோயெதிர்ப்பு மண்டலத்தில் கூடுதல் நன்மைகளை ஏற்படுத்துகிறது.

நமது நோய் எதிர்ப்பு சக்தியை பராமரிக்க உடலை கட்டுக்குள் வைத்திருப்பது அவசியம். நடைப்பயிற்சி போன்ற இலகுவான உடல் செயல்பாடுகள் நோய் எதிர்ப்பு மண்டலத்திற்கு வலுச் சேர்க்கின்றன. சுறுசுறுப்பாக இருப்பதன் மூலம் வயது மூப்பின் தாக்கத்தை நம்மால் குறைக்க முடியும். நீண்ட நேரம் அமர்ந்தே இருப்பது புகைப்பிடித்தலுக்கு ஒப்பான தீய பயன்களை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். முதுமைக் காலத்திலும் சுறுசுறுப்பாக இருப்பவர்களுடைய நோய் எதிர்ப்பு மண்டலம் சிறப்பாக இருக்கிறது.

முதுமைக் காலம் என்பது மட்டும்தான் வாழ்க்கையில் நமக்கென வாழும் காலமாகும். இது வரை அலுவலக, குடும்பப் பொறுப்புகளில் மூழ்கி இருந்த நாம் அனைத்துப் பொறுப்புகளையும் வெற்றிகரமாக முடித்துவிட்டு இளைப்பாற வேண்டிய காலமிது. நமது அனுபவம், அறிவு, திறமை போன்றவற்றில் முழு மனநிறைவு பெற்றுவிட்ட நேரம்.

எவரும் கேட்காமல் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கொடுக்கக்கூடாது. அவை நமக்கு அவமானத்தைக்கூட கொண்டு வரலாம். இருக்கின்ற மன உளைச்சல்களை அதிகப்படுத்தலாம். கூட்டுக் குடும்ப முறை மறைந்துவிட்ட நிலையில் மகன், மருமகள் போன்ற அடுத்த தலைமுறையினரின் வாழ்க்கைமுறை நமக்கு வித்தியாசமாகத் தெரியலாம். நாமும் மாறத் தயாராகவேண்டும். அவர்கள் நம் குழந்தைகள், அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்றெல்லாம் தப்புக் கணக்கு போடாதீர்கள். அவர்களின் வாழ்வின் எல்லா நிலைகளிலும் வழக்கம் போல நீங்கள் ஆதிக்கம் செலுத்த நினைத்தால் போகுமிடம் முதியோர் இல்லமாகத்தான் இருக்கும்.

பிள்ளைகளும் அவர்களின் பிள்ளைகளும் நம்மைவிட புத்திசாலிகள் என்பதை உணர்ந்து நடக்க, (சில சமயமேனும் நடிக்க) கற்றுக்கொண்டால் குறை காலத்திற்கு நிம்மதிப் பெருமூச்சு விடலாம். இது வரை தலைவனாக இருந்து பல வெற்றிக் களங்களைக் கண்டுவிட்டோம். இனி தொண்டனாக மாறி மகிழ்ச்சியுடன் வாழக் கற்றுக்கொள்ளுவோம்.

நமது சாதாரண ஒரு பங்கு மனச்சிக்கல் மூன்று பங்கு உடல் சிக்கல்களை ஏற்படுத்தும். எனவே மனநிம்மதியை தற்காத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் முதுமையில் நம்மைத் தீவிரமாக தாக்கவரும் நீரிழிவு நோய், புற்று நோய், இதய நோய், நரம்பியல் நோய் போன்றவற்றிலிருந்து தப்பிக்க முடியும். மனத்தில் சகிப்புத்தன்மைதான் காலத்தின் கட்டாயத் தேவை. வன்ம உணர்வுகளை மறந்துவிட்டு பிறர் தவறுகளை மன்னிக்க கற்றுக் கொள்வோம்.

ஓய்வுகால சேமிப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நிதிசார்ந்த விடயங்களில் தற்சார்பு நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள முயலவேண்டும். உடல் பலவீனமடைந்த நிலையில் பண உதவியையும் பிறரிடமிருந்து எதிர்ப்பார்ப்பது

# முதுமை மாற்றத்திற்குத் தயாராவோம்

4ம் பக்க தொடர்ச்சி...........

நம்முடைய மன உளைச்சல்களை அதிகமாக்கலாம். வாழ்வினை புதிய லட்சியத்துடன் வாழத் தொடங்கலாம். விருப்பு, வெறுப்பு இல்லாமல் அனைத்து உறவுகளுடனும் அன்றாடத் தொடர்பு முக்கியம். பிடித்த இசையினைக் கேட்டல், விருப்பமான பொது சேவைகளில் ஈடுபடுதல், கடவுள் வழிபாடு, தியானம், மற்றவர்களுக்கு முடிந்த உதவிகளை விரும்பிச் செய்தல் போன்றவற்றின் மூலம் மன நிம்மதி அதிகம் கிடைக்கும்.

ஆண்களுக்குத் தாடி இல்லாத அழகான முகம், பெண்களானால் மலர்ச்சியான முகம், சுத்தமான உடை, சிரித்த முகம் நமது தோற்றத்திற்குப் பொலிவு சேர்க்கும். தன்னம்பிக்கையையும் கூட்டும். ஒவ்வொரு நாளும் ஏதெனும் ஒரு புதிய விஷயத்தை கற்றுக்கொள்ளும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளலாம். கணினி, மின்னஞ்சல், இணையத்தின் பயன்பாடு போன்றவற்றில் திறனை வளர்த்துக் கொள்ளலாம்.

அதிகமாக சிரிப்பதால் சுரக்கும் 'கார்டிசால் ஹார்மோன்' நமது மன அழுத்தத்தைக் குறைக்கும். சிரிப்பு சிறந்த மருந்து. நகைச்சுவை திரைப்படங்களை பார்த்து சிரிப்பதன் மூலம் நமது இதயம் சார்ந்த நோய்களின் தீவிரத்தைக் குறைக்கலாம். பணம், செல்வாக்கு, புகழ், அழகு, காதல் இவற்றின் அருமை பெருமைகளை போதுமான அளவு அறிந்தவர்கள் நாம். அவை தந்த மகிழ்ச்சியைத் திகட்டும் அளவு அனுபவித்துவிட்டோம். எளிமையான வாழ்விலும் மகிழ்ச்சி உண்டு என்பதை இப்போது அனுபவத்தால் அறிவோம். எல்லாவற்றையும் கடந்து, யோக நிலைக்கு வந்திருக்கிறோம்.

அன்பை மட்டுமே பரப்புவோம். கிடைத்துள் ளவற்றுக்கு கடவுளுக்கும், இயற்கைக்கும் அடிக்கடி நன்றி தெரிவிப்போம். இருக்கும் காலம் வரை நம் பணிகளை

நாமே செய்து, மற்றவர்களுக்கு சுமையாக மாறாத வாழ்வினை வாழ வழி செய்ய ஆண்டவனை வேண்டுவோம்.

நமது மனம் மற்றும் அறிவு எல்லாவற்றையும் நேர்மறையாகப் பார்க்கும் அணுகுமுறையை வளர்த்துக் கொள்வது மிகவும் முக்கியம். வயதாக ஆக, மகிழ்ச்சி கூடும் என்று நிரூபிப்போம். மாற்றத்துக்குத் தயாராவோம். மற்றவை தானே நம்மைத் தேடி வரும்!

# இலங்கைக் கடலோரப் பாதுகாப்புப் படையின் திறனை மேம்படுத்தப் புதிய பயிற்சி நிலையம்













இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் பயிற்சி திறன்களை மேம்படுத்துவதற்காக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கினால் கடல்சார் பயிற்சி நிலையம் கிரிந்தவில் உள்ள இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் மேம்பட்ட பயிற்சி மையத்தில் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த பயிற்சி திட்டமானது இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான கூட்டாண்மையை மேம்படுத்துவதற்கு உதவுகிறது.

இந்த பயற்சி திட்டத்தின் மூலம் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் திறன்களை மேம்படுத்தவும் கடல்சார் சவால்களை எதிர்கொள்ளவும் உதவுகிறது.

இந்த நிகழ்வில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த பயற்சி திட்டத்தின் மூலம், கடற்கொள்ளைகளை எதிர்த்தல், விசேட பயிற்சிகள், கடத்தல்களை எதிர்த்தல் , கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில், இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் பூஜித விதான , கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Pepsi M
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலை ஸ்ரீபுர பகுதியில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் இறப்பு

திருகோணமலை, ஸ்ரீபுர பொலிஸ்பிரிவிற்குட்பட்ட கம்மம்பில கிராமத்தில் பிள்ளையார் கோயில் சந்தியில் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் காவந்திஸ்ஸ புர, ஸ்ரீ புர பகுதியைச் சேர்ந்த 26 வய துடையவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வயல் காவலில் ஈடுபட்டிருந்த நிலையில், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் அவர் மீது மூன்று முறை டி 56 ரக துப்பாக்கியால் சுட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என ஸ்ரீபுர பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணையை ஸ்ரீபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் டுபாயில் இருக் கும் போதை பொருள் கும்பலுடன் தொடர்புபட்டியிருக்கலாம் என ஸ்ரீபுர பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.(05)

# கட்சி உட்கட்டமைப்பை பலப்படுத்துகிறது மு.கா.



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை மட்டக்களப்பு தரவை - 2ஆம் கிராம சேவகர் பிரிவுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) சம்மாந்துறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, உச்ச பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளருமான கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.சீ. சமால்டீன், சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஐ. நளீம், ஐ.எல். நளீம், சம்மாந்துறை மத்திய குழு செயலாளர், எம்.எஸ்.எம். அசாருதீன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சியின் கட்டமைப்பு, தேர்தல் நடவடிக்கைகள், எதிர்கால கட்சி நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.(05)

# பொலிஸ், காணி அதிகாரங்கள் தமிழர்களை ஏமாற்றும் செயல்

## ரணிலின் நாடகத்தில் தமிழ் கட்சிகள் என்கிறார் சந்திரசேகரன்




பொலிஸ் காணி அதிகாரம் தமிழ் மக்களை ஏமாற்றும் செயல் - ரணிலின் நாடகத்தில் தமிழ் கட்சிகள் தமிழ் மக்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரத்தை ஆட்சிக்கு வந்தபின் பெற்று தருவதாக கூறும் ரணில் விக்கிரமசிங்கவின் நாடகத்தை தமிழ் மக்கள் நம்ப மாட்டார்கள் என தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் தேர்தல் பிரச்சார அலுவலகத்தை திறந்து வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது ஜனாதிபதி தேர்தலில் 22 அரசியல் கட்சிகள் மற்றும் 17 சுயேச்சைக் குழு வேட்பாளர்கள் போட்டியிடுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

அனேகமாக சுயேச்சை குழு வேட்பாளராக களம் இறங்கியவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் நிகழ்ச்சி நிரலில் களமிறங்கியவர்கள்.

தேசிய மக்கள் சக்தி தமிழ் சிங்கள முஸ்லிம் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்காக இம்முறை ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரவுக்கு அனைவருடைய ஆதரவும் பெருகிவரும் நிலையில் அதனை சகித்துக் கொள்ள முடியாத ஏனைய கட்சிகள் பொய் பிரசாரங்களை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில் ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகளை சந்தித்து பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது தொடர்பில் தான் கரிசனையாக உள்ளதாக தெரிவித்திருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க 41 வருட காலமாக பாராளுமன்றத்தில் உள்ள நிலையில் ஆறு தடவைக்கு மேலாக எதிர்க்கட்சி தலைவராகவும் பிரதமர் மற்றும் தற்போது ஜனாதிபதியாக உள்ளார்.

தமிழ் மக்களுக்கு காணி போலீஸ அதிகாரத்தை வழங்க வேண்டுமானால் தனது விசேட அதிகாரத்தை பயன்படுத்தி வழங்கியிருக்க முடியும் ஏன் மீண்டும் ஜனாதிபதி ஆகிய பின்னர் வழங்கப் போவதாக கூறுகிறார்.

தமிழ் மக்கள் சார்ந்த தேசிய இன பிரச்சனையை தீர்ப்பதற்காக முழு பாராளுமன்றமும் செயற்குழுவாக கூடிய நிலையில் 84 தடவைகள் கூட்டம் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்து எந்த ஒரு முன்மொழிவையும் சமர்ப்பிக்காத ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கப் போகிறேன் என கூறுவது வேடிக்கையாக உள்ளது.

தமிழ் மக்கள் கடந்த காலங்களாக பச்சை மற்றும் நீல நிறங்களுக்கு தடுமாறியமைக்கு தமிழ் தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

ஏனெனில் தமது மக்களை சரியான வழியில் வழிநடத்த முடியாதவர்களாக தமிழ் தலைவர்கள் காணப்பட்டதன் காரணமாக மக்களும் பல நிறங்களை ஆதரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

ஆகவே ரணில் விக்கிரமசிங்கவின் அப்பா, தாத்தா மற்றும் பாட்டன் ஆகியோரின் ஆட்சி காலத்தில் தமிழ் மக்கள் வஞ்சிக்கப்பட்ட வரலாறுகளே அதிகமாக உள்ள நிலையில் தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## தமிழர்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்வதற்காக இந்த ஜனாதிபதித் தேர்தல் களத்தைப் பாவிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்பதே தமிழர் தரப்பின் நோக்கமாகும். ஆனால் அதனை எதிர்த்து நிற்பது போன்ற தோற்றத்தைக் காட்டி நிற்கும் திரு. சுமந்திரன் அவர்கள் தமிழ் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவை முன்னிறுத்தியே இந்த பேச்சு வார்த்தைகளை நடாத்திவருகின்றார்.

திரு. சுமந்திரன் அவர்களுக்கு பேச்சுவார்த்தைகள் தொடர்பாக குறைந்தபட்ச அனுபவங்களாவது இருக்கும் என்று நான் கருதுகின்றேன். மகிந்த ராஜபக்ச தரப்புடன் பதினேழு சுற்றுப் பேச்சுகள் நடாத்தப்பட்டு அவை எவ்வாறு தோல்வியில் முடிந்தது என்பது அவருக்குத் தெரியும். இதே போன்று நல்லாட்சி காலத்தில் இதே ரணில் விக்கிரமசிங்க அவர்களது தலைமையில் புதிய அரசியல் சாசனத்திற்காக நான்கு வருடங்கள் பேசி அது எவ்வாறு தோல்வியில் முடிந்தது என்பதும் அவருக்குத் தெரியும்.

அதன் பின்னர், ரணில் விக்கிரசிங்க ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு நீங்கள் அனைவரும் தயாரா என்று கேட்ட பொழுது மகிந்த ராஜபக்ச உட்பட அனைவரும் அதற்கு ஆதரவு தெரிவித்தார்கள். ஆனால் அதன் பின்னர் அது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதே காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. விக்னேஸ்வரன் அவர்கள் வடக்கு-கிழக்கில் மாகாண சபை தேர்தல் நடக்கும்வரை ஒரு இடைக்கால சபையை உருவாக்கும்படியும் அதற்கான முழு ஏற்பாடுகளையும் அவருக்கு சமர்ப்பித்தும்கூட, அது தொடர்பாகவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இந்தியா சென்ற சமயத்திலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர் இலங்கை வந்த சமயத்திலும் பதின்மூன்றை முழுமையாக நிறைவேற்றும்படி வற்புறுத்தியும்கூட அப்பொழுதும் எதுவும் செய்யவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக இருக்கின்ற திரு. ரணில் விக்கிரசிங்க அவர்களால் அரசியல் சாசனத்தில் காணப்படும் பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள ஒருபகுதியைக்கூட நிறைவேற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத நிலையில், திரு. சுமந்திரன் போன்றோர் தொடர்ச்சியாக ரணிலை சந்திப்பதும் மாகாணசபை அதிகாரங்கள் அனைத்தையும் அவர் கொடுப்பார் போன்ற அறிக்கையை வெளியிடுவதும் தமிழ் மக்களை தவறான பாதைக்கு வழிநடத்தும் ஒரு முயற்சியாகும்.

முன்னர் பதின்மூன்றாவதை முற்று முழுதாக எதிர்த்து நின்ற திரு. சுமந்திரன் அவர்கள் இப்பொழுது பதின்மூன்றை தான் ஏதோ பெற்றுக்கொடுப்பதுபோல் படம் காட்டுவதும் தமிழ் மக்கள் அரசியல் ஞானசூன்யங்கள் என்றும் அவர்களுக்கு எதுவும் புரியாது என்ற பானியில்; நடந்துகொள்வதும் அவரது அறிவுமுதிர்ச்சியின்மையின் வெளிப்பாடு.

கொரோனா காலத்திற்குப் பின்னர் நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்துவிட்டது என்ற சூழ்நிலையில், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் வரவு-செலவுதிட்டத்தில் ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி நிறுத்தப்பட்டது. ஆனால் ஜனாதிபதி அவர்கள் இப்பொழுதுதான் விரும்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தான் விரும்பியவாறு ஒதுக்கும் நிலையைக் காணமுடிகின்றது. இதன் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளை இலகுவாகப் பெற்றுவிடலாம் என்று ரணில் கனவு காண்பதாகவும் தோன்றுகின்றது.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், ஜெனிவாவிலும்சரி, நியூயார்க்கிலும் சரி சுமந்திரனின் நடவடிக்கைகள் என்பது தமிழ் மக்களது கோரிக்கைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் எதிராகவே இருந்திருக்கின்றது. இனப்படுகொலை நடக்கவில்லை என்று கூறுவதும், யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துவிட்டது என்று கூறுவதும் தொடர்ந்து அரசாங்கத்திற்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுப்பதிலும் அவர் முன்னின்று செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தையும் புரிந்துகொள்வதினூடாக நாம் ஏன் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்குவது என்ற முடிவை எடுத்தோம் என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக இலங்கை அரசியலை கண்காணித்து வருபவர்கள். அவர்களை ஏமாளிகள் என்றோ இலகுவாக ஏமாற்றி விடலாம் என்றோ நினைப்பது மடைமைத்தனமானது.

## தமிழ் அரசுக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்திவிட்டனவே என்று செய்தியாளர்கள் சுமந்திரனிடம் கிளிநொச்சியில் நேற்றுக் கேள்வி எழுப்பினர்.

பதிலளித்த அவர், கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த 3 ஜனாதிபதித் தேர்தல்களிலும் தேர்தலுக்கு நெருக்கமாகத் தான் எமது நிலைப்பாட்டை அறிவித்திருக்கின்றோம். இந்தத் தடவை வித்தியாசமாக அதனை முற்கூட்டியே அறிவிக்கவேண்டிய எந்தத் தேவையும் இல்லை என்றார்.

வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கையை எதிர்பார்த்திருக்கின்றோம். அவர்களின் தேர்தல் அறிக்கையில் முழு நாட்டுக்கும் என்ன சொல்லியிருக்கிறார் எனப் பார்த்து எமது முடிவைச் சரியான நேரத்தில் அறிவிப்போம் என்றார்.

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒடிப்போகாமல் 'முடியும்' என்று நிற்கக் கூடியவர்களே இந்த உடன்பாட்டில் இணைந்துள்ளனர். நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் கட்டமைப்பு சீர்குலைந்து, நாடு மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டபோது, சில அரசியல் தலைவர்கள் ஓடிவிட்டனர். தலைமைத்துவத்தை மறந்தனர். நாட்டின் பிரச்சினைகளைக் கண்டு அஞ்சினர். நான் இந்த நாட்டைக் பொறுப்பேற்றபோது எனக்கு கட்சியெதுவும் இருக்கவில்லை. இந்தநாட்டைக் கட்டியெழுப்ப முடியும் எனப் பிரதமர், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னுடன் இணைந்துகொண்டனர். அன்று முடியும் என்று முன்வந்ததால் இன்று ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுகிறது.

அன்று நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்காது என்பதை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும். எனவே நாட்டின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் வகையில் இந்த ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது.

ஏனைய வேட்பாளர்களும் தங்களுக்கு வாக்களிக்குமாறு கோருகின்றனர். நாட்டை ஆள மிகவும் பொருத்தமானவர் தான் என்றும் கூறுகிறார்கள். ஆனால் நான் அப்படிச் சொல்லவில்லை. மக்கள் அனைவரும் தங்களினதும் தங்கள் குழந்தைகளின் எதிர்காலம் குறித்தும் சிந்தித்து வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நாம் அனைவரும் இலங்கையுடன் இணைந்து முன்னேறுவோம். வங்குரோத்தான மற்றும் வரிசை யுகம் காணப்பட்ட ஒரு நாட்டைத்தான் பொறுப்பேற்றோம். நாடு முழுவதும் எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள், உணவு, மருந்துக்கான வரிசைகள் இருந்தன. எங்களிடம் பணம் இருக்கவில்லை. ஒரு மில்லியன் டொலர்கள் கூட பணம் இருக்கவில்லை. இந்த வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவருவதற்கு கடினமான தீர்மானங்களை எடுக்க நேரிட்டது. அவை விருப்பத்துடன் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அல்ல. குழந்தைக்கு மருந்து கொடுக்கும்போது, அறுவைசிகிச்சை செய்யும்போது பெற்றோருக்கும் குடும்பத்தினரும் இதுபோன்ற கடினமான முடிவுகளை எடுக்க நேரிடும். அவ்வாறே நாம் நாட்டின் நலனுக்காக இந்த முடிவுகளை எடுத்தோம் .

அதன்போது, கஷ்டங்களை தாங்கிக்கொண்ட மக்களுக்கு நாம் மீண்டும் நன்றி கூறுகிறோம். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாட்டை நாம் பொறுப்பேற்று இன்று, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி, அந்நியச்செலாவணிக்கையிருப்பை அதிகரித்துள்ளோம். இந்த வேலைத்திட்டத்தை நாம் மக்களுடன் இணைந்தே செயல்படுத்தினோம்.

'ஆளும்தரப்பு வெளியேற வேண்டும், இதற்கு தீர்வு காண முடியாது' என்று பலர் மேடைகளில் கூச்சலிட்டனர். ஜெனிவா சென்றனர். ஆனால் சமுர்த்தி நன்மையைவிட மூன்று மடங்கு மக்களுக்கு 'அஸ்வெசும' நிவாரணம் வழங்கினோம். நாடு பெரும் நிதி நெருக்கடியை சந்தித்திருந்த தருணத்திலேயே இப்பணிகளை நாம் செய்தோம்.

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 02 மாதங்களுக்கு 10 கிலோ அரிசி வழங்கப்பட்டது. 'உறுமய' திட்டத்தின் ஊடாக மக்களுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வீட்டு உரிமை வழங்கப்படுகின்றது. அரச ஊழியர் சம்பளம் 10,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் மேலும் சம்பளம் அதிகரிக்கப்படும். வேறு எந்த ஆளும்தரப்பும் இதுபோன்ற பணிகளை செய்ததில்லை. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இவற்றை இடைநடுவில் நிறுத்துவதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

18 நாடுகள், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட 21 நிறுவனங்களுடன் நாம் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்தோம். இந்த நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அந்த இணக்கப்பாட்டின் பிரகாரம் நாம் செயற்பட வேண்டும்.

இதில் திருத்தம் செய்யவேண்டும் என்றால் மீண்டும் இந்த 21 நாடுகளுடனும் நிறுவனங்களுடனும் பேச்சு நடத்த வேண்டும். இந்த பணிக்ளை முடிக்க எங்களுக்கு 02 வருடங்கள் தேவைப்பட்டது. திருத்தியமைக்க இன்னும் 02 வருடங்கள் ஆகும். ஆனால் இந்த சலுகைகள் இல்லாமல் இன்னும் ஒரு வருடத்திற்கு நாம் ஒரு நாடாக தொடரந்து பயணிக்க முடியாது. எனவே இந்த செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்து நம்மிடம் உள்ள பணத்தை இழக்க வேண்டுமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.

எவ்வாறு நாம் முன்னேறுவது என்பது பற்றியும் சிந்திக்கவேண்டும். அபிவிருதியடைந்த நாட்டை உருவாக்க வேண்டும். இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். நாட்டின் எதிர்காலத்தை இப்படியே வடிவமைக்க வேண்டும்.

சிலர் 5 - 6 வருடங்கள் முன்னோக்கி சிந்திக்கின்றனர். ஆனால் ஜெனரல் றூளஜ ரீ தலைமுறை 20 - 30 ஆண்டுகள் முன்னால் நினைக்கிறது. தங்களுக்கு எதிர்காலம் இல்லை என்று கூறி நாட்டை விட்டு வெளியேற முயற்சிக்கின்றனர். அவர்களுக்காக இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

புதிய சக்தியாக நாங்கள் முன் வந்துள்ளோம். நாட்டின் அரசியல் கட்சிகள் வீழ்ச்சிகண்ட போது நாங்கள் ஒன்று சேர்ந்தோம். இன்னும் 5 ஆண்டுகளுக்கு அந்த வேலைத் திட்டத்தை தொடர வேண்டும். அத்துடன் புதிய தொரு தலைமையும் இந்நாட்டில் உருவாகியது. அண்மைக் காலத்தில் இவ்வாறானதொரு ஆளும்தரப்பை நாம் பார்த்ததில்லை.

இந்த அணியுடன் தொடர்ந்து பயணிக்க வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்பவே நாம் விரும்புகிறோம். கிராமத்தை அபிவிருத்தி செய்து இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்றிணைத்து முன்னேறக்கூடிய இலங்கையை உருவாக்க வேண்டும்.

'இயலும் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் மூலம் சிறந்த இலங்கையை உருவாக்க முன்னோக்கி செல்ல எம்முடன் இணையுமாறு நான் அனைவரையும் அழைக்கிறேன் - என்றார்.

'இயலும் ஸ்ரீலங்கா' உடன்படிக்கையில் கையெழுத்திட்ட கட்சிகளும் பெயர் விவரங்களும் :

மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி - பிரதமர் தினேஷ் குணவர்தன,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மஹிந்த அமரவீர,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - ரமேஷ் பதிரன, பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யு.எம்.அலி சப்ரி,

புதிய கூட்டமைப்பு - சுசில் பிரேமஜயந்த,

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - டக்ளஸ் தேவானந்தா,

ஐக்கிய மக்கள் கட்சி - ஹேமத்பிரிய கவிரத்ன,

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி - அனுர பிரியதர்ஷன யாப்பா,

ஐக்கிய தேசியக் கட்சி - வஜிர அபேவர்தன,

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி - சிவநேசதுரை சந்திரகாந்தன்,

தேசிய காங்கிரஸ் - ஏ.எல்.எம்.அதாவுல்லா,

ஐக்கிய மக்கள் சக்தி - ராஜித சேனாரத்ன, ஏ. எச். எம் பௌசி,

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி - அசங்க நவரத்ன,

நவ லங்கா சுதந்திரக் கட்சி - குமார வெல்கம,

ஐக்கிய மக்கள் கட்சி - அரவிந்தகுமார்

முற்போக்குத் தமிழர் கழகம் - எஸ். வியாழேந்திரன்,

சுதந்திர மக்கள் சபைக் கட்சி- உதயன கிரிந்திகொட,

தேசிய சுதந்திர முன்னணி - மொஹமட் முஸம்மில்

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் -வடிவேல் சுரேஷ்,

ஜனநாயக ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் - வேலு குமார்,

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் - எஸ். எம். எம் முஷர்ரப்,

ஜனநாயக தேசிய இயக்கம் - சதுர சேனாரத்ன,

தேசிய ஐக்கிய முன்னணி - அசாத் சாலி,

இலங்கை முற்போக்கு முன்னணி - சம்பிக்க லோவ்,

ஈழப் புரட்சிகர மாணவர் அமைப்பு - எம். ராஜநாதன் பிரபாகரன்

புதிய ஜனநாயக முன்னணி - ஷியாமலா பெரேரா,

தேசப்பற்றுள்ள மக்கள் படையணி - சுகத் சேவாபத்திரன,

ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சி - அன்வர் எம். முஸ்தபா,

லக்ஜன பெரமுன - சிந்தக வீரகோன்,

ஐக்கிய மக்கள் முன்னணி - சிறிமசிறி ஹப்புஆராச்சி,

தேசிய மக்கள் முன்னணி - கலாநிதி ஏ. எம் ஜயரத்ன,

நவஜனசெத பெரமுன - டபிள்யூ. எம் காமினி விஜேநாயக்க,

மவ்பிம அபிவிருத்தி முன்னணி - நிஷாம் மொஹமட்,

ஐக்கிய சமூக ஜனநாயக கட்சி - கே. பி. ஜயமினி ஜினதாச ஆகியோர் கையெழுத்திட்டனர்.

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாசவிற்கு எதிராக ஆளும்தரப்பு மற்றும் அவர்களுடன் 'டீல்' அரசியலில் ஈடுபட்டுள்ள அனைத்து வேட்பாளர்களின் ஊடக செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் - என்றுள்ளது.

## முஸ்லிம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு முஸ்லிம் கட்சியான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி முடிவுக்கு மாறாக ரணிலை ஆதரிக்கின்றனர் என்று அறிவித்த நிலையில், இப்போது முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சி தாவியிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது சஜித் பிரேமதாசவை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளது. ஆனால், நாட்டின் எதிர்கால நலன்களைக் கருத்தில்கொண்டு, தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி, அவரது வெற்றிக்காக முழுமையாக உழைப்பதற்கு திடசங்கற்பம் பூண்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் செயிட் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு ஏறாவூர் நகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு ஏறாவூர் நகர பிதாவாகத் தெரிவான அவர், அதே ஆண்டில் இடம்பெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு, முதன்முறையாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து 2000 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களிலும் ஐ.தே.க சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்தார். 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இந்நிலையில் கருணா அம்மானுக்கு உதவி செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பிளவுக்குதுணைபோனார் எனும் குற்றச்சாட்டு எழுந்தபோது 2006 ஆம் நாட்டை விட்டு வெளியேறி, அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் புகுந்திருந்தார்.

அரசு- புலிகள் போர் முடிவுக்கு வந்த பின்னர் தாயகம் திரும்பிய அவர், 2011 ஆம் ஆண்டு ஏறாவூர் நகர சபை தேர்தலில் போட்டியிட்டு, மீண்டும் ஏறாவூர் நகர பிதாவாக தெரிவாகியிருந்தார். பின்னர் கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு உறுப்பினராக தெரிவாகியிருந்தார்.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் அவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்தார். நல்லாட்சிக் காலத்தில் இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார்.

இறுதியாக 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு, அக்கட்சியில் இரண்டாவது இடத்திற்கு வந்திருந்தார். எனினும் அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கவில்லை. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹாபிஸ் நஸீர் அஹமட் ரணிலின் பக்கம் தாவியதை எதிர்த்து கட்சி தாக்கல் செய்த வழக்கின் மூலம் நஸீர் அகமட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து அலிஸாஹிர் மௌலானா, நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## சிறுத்தை நடமாட்டத்தால் பதியபெலெல்லயில் அச்சம்

கண்டி, பதியபெலெல்ல, நுகயாய பிரதேசத்தில் கடந்த சில நாள்களாக மாலைநேரங்களில்சிறுத்தைஒன்று நடமாடுவதால் பிரதேசவாசிகள் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்த சிறுத்தை, மான் போன்ற பல்வேறு விலங்குகளை வேட்டையாடுவதையும், வீடுகளில் வளர்க்கப்படும் நாய், மாடு போன்ற விலங்குகளைபிடித்துஉண்பதையும் பிரதேசவாசிகள் கண்டுள்ளனர்.

இதுதொடர்பில்பொலிஸாருக்கும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கும் ஏற்கனவே அறிவித்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தபிரச்சனைக்குஉடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், பொது மக்கள் மற்றும் குழந்தைகளின் உயிர்களுக்குஆபத்துஏற்படலாம்என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (05)

## இரு பாடசாலை மாணவிகள் வெல்லவாய பகுதியில் மாயம்

வெல்லவாய பிரதேசத்தில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் 10 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் இரு மாணவிகள் வியாழக்கிழமை காணாமல் போயுள்ளதாக வெல்ல வாய பொலிஸார் தெரிவித்தனர்.

15 வயதுடைய இரு பாடசாலை மாணவிகளே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

காணாமல் போன மாணவிகளில் ஒருவர் பாட வேலைக்காக கடந்த 14 ஆம் திகதி (புதன் கிழமை) வெல்லவாய, கொட்ட வெஹெரகலயாயபிரதேசத்தில்உள்ள மற்றுமொரு மாணவியொருவரின் வீட்டிற்குக் சென்றுள்ளார்.

இந்நிலையில், இந்த வீட்டின் உரிமையாளர் மறுநாள் (வியாழக்கிழமை) காலை எழுந்து பார்க்கும் போது மாணவிகள் இருவரும் வீட்டில் இல்லாததை அறிந்துள்ளார்.

இதனையடுத்து, இந்த வீட்டின் உரிமையாளர் இது தொடர்பில் வெல்லவாய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## ரயில் தடம்புரண்டமையால் மலையக சேவைகள் தாமதம்

பதுளை, தெமோதரை ரயில் நிலையத்திற்கு அருகில் அருகில் நேற்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் ரயில் ஒன்று தடம் புரண்டுள்ளதால் மலையக மார்க்கத்தில் ரயில் சேவைகள் தாமதமடைந்துள்ளன.

பதுளையில் இருந்து கண்டி நோக்கி பயணித்த ரயிலே இவ்வாறு தடம் புரண்டுள்ளது.

இதனால் தெமோதரை புகையிரத நிலையத்தை கடந்து செல்லும் ரயில்கள் தாமதமடையும் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

# சேருவில தங்கநகர் யுவதி கொலை சம்பவம்: வழக்கு விசாரணையில் இருவருக்கு பிணை

படுகொலை செய்யப்பட்ட தங்கநகர் யுவதியின் கொலைமீதான வழக்கு விசாரணை மூதூர் நீதிமன்ற நீதிபதி திருமதி தஸ்னீம் முகமட் பௌசான் முன்னிலையில் விசாரணைக்காக நேற்று (வெள்ளிக்கிழமை) எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் சகோதரியான 7ஆம் எதிராளி மற்றும் 4ஆம் எதிராளிகளுக்கு பிணை வழங்கியும், ஏனைய 5 சந்தேகநபர்களுக்கு விளக்கமறியலை மேலும் 14 நாள்கள் நீடித்தும் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கானது நேற்று மூன்றாவது தடவையாக மூதூர் நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது எதிரிகள் சார்பில் முன்வைத்த பிணைவிண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிபதி குறித்த தரப்பினரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான காதலனின் சகோதரியான 7ஆம் எதிராளியையும், ஜே.சி.பி இயந்திரத்தின் தரகரான 4ஆம் எதிராளியையும் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டதோடு ஏனைய 5 பேரையும் விசாரணைக்கு உட்படுத்தும் முகமாக விளக்கமறியலை எதிர்வரும் 30ஆம் திகதிவரை நீடித்தும் கட்டளை பிறப்பித்திருந்தார்.

சேருவில பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி (வயது 25) என்ற இளம் பெண் படுகொலை செய்யப்பட்டு கிளிவெட்டி கிராமத்தின் ஒதுக்குப்புறமாகவுள்ள கிணறு ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த யூலை மாதம் 5ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து பிரதான சந்தேகநபரான யுவதியின் காதலன் உட்பட சந்தேகத்தின்பேரில் 7 பேர் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையிலேயே நேற்றைய தினம் இருவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கானது கடந்த ஜூலை 19 ஆம் திகதி அன்று வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கு தொடுனரான மூதூர் பொலிஸார் நான்கு எதிரிகளை குறித்த வழக்கில் இருந்து விடுதலை செய்யுமாறு கோரியிருந்த நிலையில், பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களையும், வழக்கு விசாரணைகளையும் ஆராய்ந்ததோடு குறித்த வழக்கில் பொலிஸாருடைய விசாரணையில் திருப்தி அடையாத நீதிபதி குறித்த வழக்கை திருகோணமலை மாவட்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(05)

# மின் தாக்கி இளைஞர் சாவு வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஓமந்தை ஆறுமுகத்தான்குளம் பகுதியில் விலங்குகளுக்காக வைக்கப்பட்டிருந்த மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் மரணமடைந்தார்.

குறித்த சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் –

நேற்று அதிகாலை தோட்டத்திற்கு சென்ற மகன் நீண்டநேரமாகியும் காணாதமையால் அவரது தந்தை தேடியுள்ளார்.

இதன்போது காணியின் பின்புறத்தில் குறித்த இளைஞர் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளதுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் 21 வயதுடைய இளைஞரே மரணமடைந்துள்ளார்.

அவர் விலங்குகளுக்காக பொருத்தப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.(05-100)

# மேன்முறையீட்டு நீதிமன்றிற்கு பதில் தலைவர் நியமனம்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக நீதியரசர் ஆர். எம்.சோபித ராஜகருணா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக ஆர்.எம்.சோபித ராஜகருணா நேற்று (வெள்ளிக்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக கடமையாற்றிய நிஷ்சங்க பந்துல கருணாரத்ன, வெளிநாடு சென்றுள்ள நிலையில் அவர் நாடு திரும்பும்வரை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

(05)

# விடுதலைப் புலிகளின் புதையலை தேடி புதுக்குடியிருப்பில் அகழ்வு



யுத்த காலத்தில் விடுதலை புலிகள் ஆயுதங்கள் மற்றும் தங்கம் மறைத்து வைத்திருந்ததாக சந்தேகிக்கப்படும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில்



பகுதியிலுள்ள தனியார் காணியில் நேற்று (வெள்ளிக்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் மேற்பார்வையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றிருந்தன.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் முல்லைத் தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதியின் உத்தரவின் பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு, பொலிஸார், இராணுவத்தினர், கிராம சேவையாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் இணைந்து அகழ்வு பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் நிலத்தில் பல மணிநேரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்டபோதும் ஆயுதங்களோ அல்லது வேறு எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தோண்டப்பட்ட இடங்களில் எதுவும் கிடைக்காததால், மீண்டும் தோண்டப்பட்ட இடங்களை மூட நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி தர்மலிங்கம் உத்தரவிட்டதனை தொடர்ந்து மூடப் பட்டிருந்தது.

மேலும், மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து கைதி ஒருவர் தப்பியோட்டம்

பொலன்னறுவை, வெலிகந்த, கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை, பந்தனாகல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய கைதியொருவரே தப்பிச் சென்றுள்ளார்.

தற்போது, வெலிகந்த, கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் 93 கைதிகள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச்சென்ற கைதியை கண்டுபிடிக்க விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# வலி வடக்கு நகுலேஸ்வரத்தில் ஆலய வழிபாட்டுக்கு அனுமதி





வலி. வடக்கு நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் மிக நீண்ட காலமாக உயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீமத் நாராயன சுவாமி ஆலய வழிபாட்டிற்கு நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இவ் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதிபன் மற்றும் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் பங்குபற்றலுடன் பக்தர்கள் நேற்றையதினம் இவ் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# அநுர, ராமக்ஞ மஹா நிக்காயவின் மஹா நாயக்க தேரரை சந்தித்தார்



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் தோழர் அநுர குமார திசாநாயக்க நேற்று (வெள்ளிக்கிழமை) மீரிகம கந்தன்கமுவ ஸ்ரீவித்யாவாச பிரிவென் மஹா விகாரையில் ராமக்ஞ மஹா நிக்காயவின் மஹா நாயக்க தேரர் சங்கைக்குரிய மக்குலேவே விமல நாயக்க தேரரை சந்தித்தார்.

இன்றளவில் நாட்டில் நிலவுகின்ற அரசியல் நிலைமை பற்றி அவரை உள்ளிட்ட மஹா சங்கத்தினருடன் கலந்துரையாடிய தோழர் அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கான அவர்களின் நல்லாசியை பெற்றுக்கொண்டார்.

இத்தருணத்தில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் தோழர் விஜித ஹேரத்தும் பங்கேற்றார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# கொலை செய்யப்பட்ட இளைஞனுக்கு நீதிகோரி மல்லாவியில் ஆர்ப்பாட்டம்







மறுநாள் கனடா செல்ல தயாரான நிலையில் கடந்த 29.07.2024 அன்று மல்லாவி வவுனிக்குளம் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட மல்லாவி யோகபுரம் பகுதியைச்சேர்ந்த ஆனந்தராசன் சஜீவனின் மரணத்திற்கு நீதி கோரி மல்லாவி பகுதியில் பொதுமக்கள் பொது அமைப்புக்கள் மற்றும் வர்த்தக சங்கம் என்பன இணைந்து பாரிய அளவிலான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று (வெள்ளிக்கிழமை) காலை மேற்கொண்டிருந்தது

19 நாள்களாகியும் குறித்த இளைஞனின் படுகொலைக்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதுடன் , பொலிஸாரின் விசாரணைகள் மந்தகதியில் நடப்பதாக கூறியும் , துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கூறியே பொதுமக்கள் மற்றும் போது அமைப்புகளால் நேற்று குறித்த போராட்டம் முன்னேடுக்கப்பட்டது.




மல்லாவி மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பமாகிய பேரணி மல்லாவி போலிஸ் நிலையம் வரை சென்றிருந்தது. பின்னர் ஆர்ப்பாட்டத்தில்கலந்துகொண்டவர்கள்ஒன்று கூடி , 'சசீவன் மரணத்திற்கு நீதி வேண்டும்', 'கொலையாளிகளைநீதியின்முன்நிறுத்து','விசாரணைகளை துரிதப்படுத்தி நீதியை பெற்று தா', 'எமதுநண்பனின்மரணத்திற்குநீதிவேண்டும்', 'வஞ்சகரின் சூழ்ச்சிக்கு முடிவில்லையா', 'எமது பிள்ளைக்கு நீதி வேண்டும் ',

போன்றஎதிர்ப்புசுலோகங்களைஏந்தியவாறு போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் கோஷமிட்டனர்.

இதேவேளை குறித்த போராட்த்திற்கு ஆதரவாக நேற்றுமல்லாவிபகுதிகளில்வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

பொலிஸ் நிலையம் முன்பு ஒன்று கூடிய மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை , சம்பவ இடத்திற்கு வருகை தந்த மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி , குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் , இளைஞனின் படுகொலைக்கான நீதியைத் தான் பெற்று தருவதாகவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை குறித்த காலப்பகுதிக்குள் துரிதகதியில்விசாரணைகளைமுன்னெடுத்து குற்றவாளிகளை நீத்தியின் முன் நிறுத்தாவிடின் பாரியளவிலான போராட்டம் ஒன்றைத் தாம் மேற்கொள்வோம் என்றும் , சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தையும் தாம் முன்னெடுப்போம் என்றும் எச்சரித்து, பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களான செலவராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஶ்ரீஸ்கந்தராசா ஆகியோர் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். அவர்களிடமும் மகஜர் கையளிக்கப்பட்டது. போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் கலந்துகொண்டிருந்தன. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.08.2024இல் வெளியிடப்பெற்றது